2026 ஜூலை மாதம் 30– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 32/2021

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW15 (LW17) – சசிக்குமார் |
| தகப்பனார் பெயர்: | தங்கமுத்து |
| ஊர்: | குன்னூர் |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கிராம நிர்வாக அலுவலர், குன்னூர் |
| வயது : | 47 |

30.07.2026

(1, 2, 9 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 3 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், குன்னூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.02.2020 ம் தேதி மயிலாடும்பாறை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது, எனது அறையில் இருந்தபோது, மயிலாடும்பாறை கிராமம்,

தங்கம்மாள்புரம் உப்புத்துறை ரோட்டில் வசிக்கும் முத்தையா தேவர் மகன் மகாராஜன் என்பவர் என்னுடைய அறைக்கு வந்து, தன்னுடைய மகளின் கணவர் திரு.பரமசிவன் மகன் செல்லப்பாண்டி என்பவரை ஆள்வைத்து ராமநாதபுரம் மாவட்டத்தில் கொலை செய்துவிட்டேன் என்று கூறினார்.

2. இது தொடர்பாக கடமலைக்குண்டு காவல்நிலையத்தில் என்னை விசாரணைக்கு அழைத்ததாகவும் கூறினார். அவரிடம் இது பற்றிய முழுமையாக விசாரணை செய்தபோது, தனது மகள் சித்ராவை சுமார் 20 வருடங்களுக்கு முன்பு கடமலைக்குண்டு கிராமத்தை சேர்ந்த பரமசிவன் மகன் செல்லப்பாண்டி என்பவருக்கு திருமணம் முடித்துக்கொடுத்ததாகவும், அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், ஒரு பெண்குழந்தையும் உள்ளார்கள் என்று கூறினார். அவர்களுக்குள் இருந்த குடும்ப பிரச்சனை காரணமாக தனது மகளை தாக்கியும், உடம்பில் கம்பியால் தாக்கியும் கொடுமைப்படுத்தியுள்ளார்.

3. இதைப் பற்றி எனது மனைவியிடம் எனது மகள் கூறினார். எனது மனைவி என்னிடமும், எனது மகன் தெய்வேந்திரனிடமும் மேற்படி சங்கதி குறித்து கூறினார். நாங்கள் செல்லப்பாண்டியை சும்மா விடக்கூடாது, கொலை செய்துவிட வேண்டும் என்று முடிவு செய்தோம். எனது மகன் சென்னையில் வேலை பார்த்த இடத்தில் அவருக்கு தெரிந்த ஆட்களை வைத்து, கொலை செய்துவிடலாம் என முடிவு செய்தோம். அவருடைய மருமகன் செல்லப்பாண்டியுடன் நன்கு பழகிய திரு.சக்திவேல் மூலமாக செல்லப்பாண்டியை கொலை செய்ய வேண்டும் என்று முடிவு செய்தோம் என்று கூறினார்.

4. மேலும் இரண்டு மாதங்கள் கழித்து சென்னையில் இருந்து இரண்டு ஆட்களை தேனிக்கு அனுப்பினார். அவர்களை தேனியில் உள்ள லாட்ஜில் தங்கவைத்து, மகாராஜன் நேரடியாக லாட்ஜிக்கு சென்றபோது, அங்கு தூத்துக்குடி சேர்ந்த 4 வது எதிரி தினேஷ், நாகர்கோவிலை சேர்ந்த 5 வது எதிரி செந்தில் ஆகிய இரண்டு நபர்களும் இருந்தார்கள் என்று கூறினார். மேலும்

மகாராஜன் அவர்களிடம் நீங்கள் இரண்டு பேரும் சொல்லும் இடத்திற்கு நான் எனது மருமகனை அனுப்பி வைக்கிறேன் என்று கூறியதாக சொன்னார்.

5. மேலும் பின்பு மூன்று மாதங்கள் கழித்து எனது மருமகனை இராமநாதபுரத்திற்கு 3 வது எதிரி சக்திவேல் மூலமாக அழைத்துச்சென்று, அங்கு அவரை கொலை செய்து, எரித்துவிட்டதாக கூறினார். மேலும் தனது மருமகன் காணவில்லை என கடமலைக்குண்டு காவல்நிலையத்தில் அவருடைய சகோதரர் புகார் கொடுத்தார் எனவும், இது தொடர்பாக கடமலைக்குண்டு காவல்நிலையத்தில் விசாரணைக்கு வீடு தேடி வந்தார்கள் என்றும், கொலை செய்ததற்கான மீதி பணத்தை கேட்டு, கொலை செய்தவர்கள் என்னை மிரட்டினார்கள் என்று 1 வது எதிரி மகாராஜன் கூறினார். அதனால் தான் என் முன்பு சரணடைந்ததாக கூறினார்.

6. நான் 1 வது எதிரி மகாராஜனின் வாக்குமூலத்தை கடமலைக்குண்டு காவல்நிலையத்திற்கு சென்றபோது, அங்கு பணியிலிருந்த காவல் ஆய்வாளர் திரு.சுரேஷ்குமார் அவர்களிடம் 1 வது எதிரி மகாராஜனையும், எனது அறிக்கையையும் சமர்ப்பித்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் 1 வது எதிரியை கைது செய்து, என் முன்பாகவும், ஆலந்தளிர், சீனித்தேவர் மகன் ஜெயக்கொடி முன்பாகவும் ஆய்வாளர் 1 வது எதிரி மகாராஜனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். அதற்கு நாங்கள் சாட்சியாக இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோம்.

7. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆய்வாளரிடம் 1 வது எதிரி மகாராஜன் தன்னை அழைத்துச்சென்றால் அவர்கள் தங்கியிருந்த லாட்ஜில் அடையாளம் காட்டுவதாக கூறினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2, 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

8. மயிலாடும்பாறை வருவாய் கிராமம் பல்வேறு கிராமங்களை உள்ளடக்கியது என்றால் சரிதான். தங்கம்மாள்புரம், கோவில்பாறை, வாய்க்கால்பாறை, ஆத்துக்காடு, உப்புத்துறை, புதூர், கருப்பையாபுரம், அருகவெளி, முத்தாலம்பாறை, மூலக்கடை, நரியூத்தூ, ஓட்டணை, செங்குளம், கோவிலாங்குளம் ஆகிய கிராமங்கள் மயிலாடும்பாறை வருவாய் கிராமங்கள் உள்ளடக்கியது என்றால் புதூர், உப்புத்துறை, கருப்பையாபுரம், அருகவெளி, முத்தாலம்பாறை ஆகிய கிராமங்கள் மயிலாடும்பாறை வருவாய் கிராமங்களுக்குள் உள்ளடக்கம் அற்றவை. எனது மயிலாடும்பாறை கிராமத்தில் சுமார் 10,000 பட்டாதாரர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான்.

9. மயிலாடும்பாறை கிராமத்தில் சுமார் 30,000 நபர்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மயிலாடும்பாறை வருவாய் கிராமங்களுக்குள் வசிக்கும் நபர்களின் பெயர், தந்தை பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது என்றாலும், குறிப்பிட்டு அடையாளம் காட்ட முடியாது என்றால் சரிதான். தங்கம்மாள்புரம் கிராமத்தில் சுமார் 300 வீடுகள் உள்ளன என்றால் சரிதான். தங்கம்மாள்புரம் கிராமத்தில் பல்வேறு சாதியினர் உள்ளனர் என்றால் சரிதான். மகாராஜனை என்னிடம் ஆஜரானதாக சொல்லப்படும் தேதியில் தான் எனக்கு தெரியும் என்றாலும் அன்று தான் அவரை பார்த்தேன் என்றால் சரியல்ல, அதற்கு முன்பு அவருடன் நான் பேசியுள்ளேன்.

10. எங்கள் அலுவலகம் மயிலாடும்பாறை, காவல்நிலையத்திற்கு அருகில் இருந்தது என்றால் சரியல்ல. 1 வது எதிரி என்னிடம் ஆஜரானதாக சொல்லப்படும் தேதியில் எங்கள் அலுவலகம் அருகில் காவல்நிலையம் இருந்தது என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலருக்கு நடைமுறை சட்டம் உள்ளது என்றால் சரிதான். நான் செய்ய வேண்டிய பணிகள் குறித்து அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்றச் செயல் சம்பந்தமாக ஒருவர் புகார் கொடுக்கும்போது, அதை வாக்குமூலமாக பதிவு செய்ய எனக்கு அதிகாரம் உள்ளது என்றால்

சரிதான். அதை பதிவு செய்து, அதன் ஒரு நகலை அவரிடம் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான்.

11. இதுபோன்ற குற்றங்களில் புகார் வாக்குமூலத்தை மூன்று நகல்கள் தயார் செய்ய வேண்டும் என்றால் சரிதான். ஒரு அசலை காவல்நிலையத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். மற்றொரு நகலை கிராம நிர்வாக அலுவலரின் முத்திரையிட்டு, ஆளுகைக்குட்பட்ட நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் கட்டாயமாக புகார் வாக்குமூலத்தை அனுப்ப வேண்டும் என்று தெரிந்துகொண்டு, நான் அனுப்பாததால் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரி மகாராஜனிடம் வாக்குமூலம் எழுதி வாங்கினேனா என்றால் 1 வது எதிரி மகாராஜன் சொல்ல சொல்ல நான் எழுதினேன். 1 வது எதிரி மகாராஜன் அனுப்புநராக இருந்து, நான் பெறுநராக இருந்து வாக்குமூலம் பெறப்பட்டதா என்றால் இல்லை.

12. அ.சா.ஆ.11–ல் அனுப்புநர் சசிக்குமார், கிராம நிர்வாக அலுவலர், மயிலாடும்பாறை என்றும், பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர், கடமலைக்குண்டு காவல் வட்டம் என்றும் உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.11–யை 1 வது எதிரிக்கு படித்துக் காண்பித்ததாகவோ, அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் இட்டதாகவோ குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் கணினி இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.11 கணினியால் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.11 பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து ஆய்வாளரின் அறிவுரையின்படி தயாரிக்கப்பட்ட ஒன்று என்றால் சரியல்ல.

13. காவல்நிலையத்தில் வைத்து என்னிடமும், 1 வது எதிரி மகாராஜனிடமும் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்தபின்பு தேதி குறிப்பிடுவேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.11–ல் இரண்டு இடங்களில் கையொப்பம் செய்து முத்திரை வைத்துள்ளேன் என்றால்

சரிதான். அ.சா.ஆ.11–ல் முதலில் செய்த கையொப்பத்தில் 08.02.2020 என்றும், இரண்டாவதாக செய்த கையொப்பத்தில் 28.02.2020 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, இரண்டு இடங்களிலும் 28.02.2020 தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.11–ல் காவல் ஆய்வாளர் பெற்றுக்கொண்டதாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

14. பொதுவாக எனது அலுவலக நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை அலுவலக நேரம் என்றால் சரிதான், அலுவலக வேலையாக வெளியில் சென்றால் அலுவலக நேரம் என்பது கிடையாது. 1வது எதிரி மகாராஜன் எங்கு வைத்து வாக்குமூலம் கொடுத்தார் என்றால் எனது அறையில் வைத்து கொடுத்தார். போலீசார் விசாரணையில் நான் கேம்ப் அலுவலகத்தில் இருந்தேன், அங்கு வந்து எதிரி வாக்குமூலம் கொடுத்தார் என்று கூறினேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.11–ல் நான் எனது வீட்டில் ஓய்வில் இருந்தபோது, எதிரி ஆஜரானார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தங்கம்மாள்புரத்திற்கும், மயிலாடும்பாறை கிராமத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 2 கி.மீ. தூரம் இருக்கும்.

15. மயிலாடும்பாறை கிராமத்திலிருந்து தேனி சுமார் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 30 கி.மீ. இருக்கும். அ.சா.ஆ.11–ல் இரவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது, நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு முன்னர் அ.சா.ஆ.11 உடன் குற்ற நமுனா தயார் செய்தேனா என்றால் இல்லை. எனக்கு உதவியாளர் இருந்தார் என்றால் இல்லை. எனது பணிக்கு உதவியாக யாரையும் வைத்துக்கொள்வேனா என்றால் இல்லை. ஆலந்தளிர் எங்கள் கிராமத்திற்கு கட்டுப்பட்டதா என்றால் இல்லை. ஆலந்தளிர் கிராமத்தில் சுமார் 250 வீடுகள் உள்ளன என்றால் சரிதான். ஆலந்தளிர் கிராமத்தில் உள்ள நபர்களை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

16. 28.02.2020ம் தேதி 1வது எதிரி மகாராஜன் ஆஜராகவும் இல்லை, அவர் என்னிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, கொடுத்தார். செல்லப்பாண்டி சம்பந்தமாக எந்தவொரு சங்கதிகளையும் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளரின் அறிவுறுத்தலின்பேரில் அ.சா.ஆ.11 பின்னிட்டு தட்டச்சு செய்யப்பட்டு, காவல் ஆய்வாளர் சொன்னதின்பேரில் முதல் விசாரணையில் உள்ள சங்கதிகளை கூறினேன் என்றால் சரியல்ல. எனது சொந்த ஊர் கோட்டூர் என்றால் சரிதான். அங்கே எனக்கு வீடு உள்ளதா என்றால் இல்லை, வாடகைக்கு தங்கியிருந்தேன்.

17. யாருடைய வீட்டில் இருந்தேன் என்றால் பெயர் ஞாபகமில்லை. வாடகை இரசீது உள்ளதா என்றால் இல்லை, ஒப்பந்த பத்திரம் போட்டுள்ளேன். எவ்வளவு வாடகை என்றால் ரூ.1,500/– ஆகும். காவல்நிலையத்தில் வைத்து மகாராஜன் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை, ஆய்வாளர் அதை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12 பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்றேன் என்றால் இரவு 12.00 மணிக்கு இருக்கும்.

18. ஒப்புதல் வாக்குமூலம் மறுநாள் 29.02.2020ம் தேதி தட்டச்சு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12 ஒரே கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து ஒரே கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்ததின்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

19. 1வது எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.11–ல் 3 வது எதிரி சக்திவேலை பற்றி 1வது எதிரி கூறவில்லை என்றால் சரியல்ல. சக்திவேலை பற்றி ஆய்வாளர் தயார் செய்த அ.சா.ஆ.11–ல் நான் கையொப்பம் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. அ.சா.ஆ.11–ல் காங்கேயம் சக்திவேல் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், வேறு எந்த அடையாளம் இல்லை என்றால் சரிதான். நான் அரசு ஊழியர் என்பதால் காவல்துறையின் உதவிக்காக அடிக்கடி காவல்நிலையம் செல்வேன் என்றால் சரிதான். அதனடிப்படையில் அவர்களுக்குடைய தயவு வேண்டும் என்பதால் ஆய்வாளர் தயாரித்த உண்மைக்கு முரணான அறிக்கையில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**4 முதல் 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1 முதல் 3, 9வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை அப்படியே ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைத்ததின்பேரில் 1 முதல் 3, 9வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை 4 முதல் 8 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்கிறார்கள்.

**நீதிமன்ற கேள்வி**

1வது எதிரி மகாராஜன் தற்போது நீதிமன்ற ஆஜரில் உள்ளாரா என்றால் உள்ளார்.

**1, 2, 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மகாராஜனை எனக்கு தெரியாது என்றாலும், போலீசார் சொல்லிக்கொடுத்ததின்பேரில் நான் தெரியும் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 30.07.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.30 18:21:20 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
30.07.2026